சுருக்கம்

தொல்லியல் – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு ச.நாகராஜன் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக நியமனம் – பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்(அதொ2) துறை

அரசாணை (3ப) எண். 5

நாள்.02.05.2018.
திருவள்ளுவர் ஆண்டு –2049,
விளம்பி, சித்திரை–19.

படிக்கப்பட்டது:

1. தொல்லியல் துறை ஆணையரின் கடித எண்.அ1/5929/2014, நாள்.24.01.2017 மற்றும் 19.07.2017.
2. அரசு கடித எண்.1071/அதொ–2/2017–4, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை. நாள். 22.02.2012
3. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடித எண்.992/சிடி–அ2/2018, நாள்.27.02.2018.

------

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தொல்லியல் துறை ஆணையர் அவர்கள், தொல்லியல் துறையின் தஞ்சை சார் அலுவலகத்தில் பெருக்குநராகப் பணிபுரிந்த திருமதி.ச.வெள்ளச்சி என்பவர் 18.06.2014 அன்று பணியில் இருந்த போது மரணமடைந்தார் எனவும், இவரது மகன் திரு ச.நாகராஜன் என்பவருக்கு கருணை அடிப்படையில் தொல்லியல் துறையின் தஞ்சை மண்டல உதவி இயக்குநர் அலுவலகத்தில், இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டு அவர் 20.02.2016 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் எனவும், இவரது பிறந்த தேதி 28.05.1987 எனவும், இவர் இடைநிலைக் கல்வி பள்ளி இறுதி வகுப்பு (10) தேர்ச்சி பெற்றுள்ளார் எனவும், இவர் இளநிலை உதவியாளர் பதவிக்கான கல்வி மற்றும் வயது வரம்பினை நிறைவு செய்துள்ளார் எனவும் தெரிவித்து, இவரது பணியினை 20.02.2016 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்யுமாறு அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசு கடிதத்தில், திரு.ச.நாகராஜன் என்பவரின் பணியினை அவர் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 20.02.2016 முற்பகல் முதல் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் முறையாக வரன்முறைப்படுத்த, 1954–ம் ஆண்டு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் ஒழுங்கு முறைகளில் ஒழுங்கு முறை விதி 16(b) பிற்பகுதியின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவு கோரப்பட்டது.

த.பி.பா.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், இக்கருத்துருவிற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தனது இசைவினை தெரிவித்துள்ளது.

4. அதற்கிணங்க, தொல்லியல் துறையின் தஞ்சை சார் அலுவலகத்தில் பெருக்குநராகப் பணிபுரியும் போது 18.6.2014 அன்று காலமான திருமதி. ச. வெள்ளச்சி என்பவரின் மகன் திரு ச.நாகராஜன் என்பவரின் பணியினை, கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 28-ன் படி தொல்லியல் துறையின் தஞ்சை மண்டல உதவி இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியமர்த்தப்பட்ட நாளான 20.02.2016 முற்பகல் முதல், அவர் தேவையான உடல் தகுதிகளை பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறைப்படுத்தி அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாறு முன்னாளிட்டு இவரது பணிகள் வரன்முறை செய்யப்படுவதால் இவர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத் தொகை ஏதேனும் இருப்பின் அவைகளை பெற விதிகளின்படி தகுதி உடையவராகிறார்.

6. இவ்வாணை பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அ.சா. எண்.9757/ஜி2/2018, நாள் 18.04.2018 மற்றும் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அ.சா.எண்.7893/க்யூ1/2018, நாள் 26.04.2018-ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வ வர்மா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்,
ஆணையர்(மு.கூ.பொ), தொல்லியல் துறை, சென்னை – 8.
திரு ச.நாகராஜன், இளநிலை உதவியாளர், தஞ்சை மண்டல உதவி இயக்குநர் அலுவலகம், தஞ்சாவூர்.
(ஆணையர் மூலமாக)
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை – 3.
நகல்:
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை, சென்னை – 9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை – 9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

இரா. கற்பகவல்லி 7.5.18
பிரிவு அலுவலர்.
7.5.2018

ந.க.எண். அ2/5729/2014, நாள். 20.06.2019

மேற்படி ஆணை திரு.ச.நாகராஜன், இளநிலை உதவியாளர், தஞ்சை அலுவலகத்தில் சார்பு செய்யப்படுகிறது.

20/06/19
துணை இயக்குநர்
தொல்லியல் துறை
சென்னை-600 008.

பெறுநர்.
திரு.ச.நாகராஜன்,
இளநிலை உதவியாளர், தஞ்சை (உரிய வழியாக)